ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## கோயில் கந்தாடை அண்ணன்

## வாழி திருநாமம்

தேனமரு மலர் முளரித் திருத்தாள்கள் வாழியே
திருச்சேலையிடை வாழி திருநாபி வாழியே
தானமரு மலர்க்கண்கள் தனி உதரம் மார்பம்
தங்கு தொங்கும் உபவீதம் தடந்தோள்கள் வாழியே
மானபரன் மணவாள மாமுனி சீர் பேசும்
மலர்ப் பவளவாய் வாழி மணிமுறுவல் வாழியே
ஆனனமும் திருநாமம் அணி நுதலும் வாழியே
அருள் வடிவன் கந்தாடை அண்ணன் என்றும் வாழியே

பேராத நம் பிறப்பைப் போக்க வல்லோன் வாழியே
பெரிய பெருமாள் அருளால் பெருமை பெற்றோன் வாழியே
ஏராரு நன்மதியின் ஏற்றம் உள்ளோன் வாழியே
எதிராசன் தரிசனத்தை எடுத்துரைப்போன் வாழியே
பாரார நன்புகழைப் படைக்க வல்லோன் வாழியே
பகர் வசனபூடணத்தின் படியுடையோன் வாழியே
ஆராமம் சூழ் கோயில் அவதரித்தோன் வாழியே
அவனி தொழும் கந்தாடை அண்ணன் என்றும் வாழியே

---